9th December 1959]

Sri J. MATHA GOWDER : நீலகிரியில் அலுமினியம் செய்யக் கூடிய பாக்ஸைட் 20 லட்சம் டன் தற்போதைக்கு கிடைக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்கார் இதுபற்றி ஆராய்ச்சி செய்து, அப்படி என்றால் அங்கு ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முன்வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. இதுவரையில் எனக்கு ஒன்றும் தெரியாது. தனியாக கேள்வி கேட்டால், பார்த்து சொல்லலாம்.

Sri N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலையை பொதுத் துறையிலே நடத்துவதற்கு சர்க்கார் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது தனியார் துறையிலே சௌகர்யம் இருக்கிறது என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். பொதுத் துறையை விட, தனியார் துறை எந்த விதத்தில் சௌகரியம்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முன்பே சொன்னேன், சில பெரிய கனரகத் தொழிற்சாலைகளை தனியார் துறையில் நடத்துவது, சிலவற்றை பொதுத் துறையில் நடத்துவது என்று. குறிப்பிட்ட ஒரு தொழிலை எப்படி நடத்துவது என்று யோசனை செய்து பரிசீலனை செய்யப்படுகிறது. முதலில் இந்த அலுமினியம் தொழிற்சாலை பொதுத் துறையில் நடத்துவதாக யோசிக்கப் பட்டது. பிறகு பரிசீலனை செய்ததில் பொதுத் துறையில் வேண்டாம், தனியார் துறையில் நடத்துவது நலன் என்ற முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, may I know whether the scheme will be taken up before the end of the Second Five-Year Plan itself?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do think so, Sir.

Sri A. MARIAPPAN : இந்தத் தொழிலை வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பதினால்தான் தாமதம் ஆகிறது என்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமா?

Mr. SPEAKER : The question is out of order.

Political Sufferers

*79 Q.—Sri P. S. CHINNADURAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா— 9-30 a.m.

(அ) சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கு விசேட கல்விச் சலுகைகளை, அதாவது, இலவச ஆஸ்டல் போன்றவைகளை விஸ்தரிப்பது குறித்து இந்த சர்க்கார் ஆலோசித்து வருகிறதா?

[9th December 1959

(ஆ) அப்படியானல், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes, Sir. The Government of India have suggested a scheme for the grant of scholarships and other educational concessions to the children of political sufferers. The question as to the extent to which the suggestion may be accepted is under the consideration of this Government.

SRI T. S. RAMASWAMY : May I know the details of the communication received from the Central Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : The matter is under consideration. As soon as a decision is taken the whole matter will be published.

SRI V. SUBBIAH : அரசியல் தியாகிகள், கட்சி மாற்றம், மத மாற்றம், பொருளாதார மாற்றம் செய்த எத்தனை பேர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அது அமலுக்கு வர வில்லை.

T.B. Sanatorium at Austinpatti

*** 80 Q.—SRI N. R. THIAGARAJAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) மதுரை அருகேயுள்ள ஆஸ்டின்பட்டி டி. பி. சான டோரியம் கட்டி எத்தனை வருடங்களாகிறது ?

(ஆ) அதில் டாக்டர்களை நியமித்து நோயாளிகளை எப்பொழுது அனுமதிக்க சர்க்காருக்கு உத்தேசமிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The buildings at Tuberculosis Sanatorium, Austinpatti, Madurai district, were partially constructed by the Madurai District Branch of the Madras Provincial Welfare Fund up to June 1956.

(b) The Sanatorium can start functioning after the quarters for the staff are completed, i.e., early in 1960.

Milk powder

*** 82 Q.—SRI P. G. MANICKAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்தில் மத்திய அரசாங்கத்தாரால் இந்த ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்ட பால் பவுடரானது என்னென்ன விதமாக வினியோகம் செய்யப்படுகிறது ?